**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No.419/2018 |
| Deposition Of Witness for | Prosecution PW 3<br>Defense<br>Court |
| Name | **திரு. அர்ச்சுனன்** |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2024 |

**எதிரிகள் ஆஜர்**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 20th day of September 2024.

நான் சேவகன்குளத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1 மற்றும் ஆஜர் எதிரிகளை தெரியும். என்னுடைய பக்கத்துவீட்டுக்காரர்கள். காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான் அந்த கையெழுத்து **அ.சா.ஆ.2** ஆகும். தேதி மாதம் ஞாபகமில்லை சுமார் 5 வருடத்திற்கு முன்பு நான் வீட்டிலிருந்தபோது போலிஸார் வந்து என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். வழக்கு பற்றி எந்த விபரமும் தெரியாது. வழக்கு பற்றி போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க கோரி, அனுமதி கோரப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

01.02.2018 ஆம் தேதி காலை 02.00 மணிக்கு சம்பவ இடமான அ.சா.1ன் வீடு மற்றும் அதன் சுற்றுபுறங்களையும் காவல் உதவி ஆய்வாளர் உங்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்த போது உடன் இருந்து சாட்சியாக கையெழுத்து செய்துவிட்டு தற்சமயம் உண்மைக்கு

மாறாக எதிரிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சி அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No.419/2018 |
| Deposition Of Witness for | Prosecution PW 2<br>Defense<br>Court |
| Name | **திரு. முகேஷ்** |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2024 |

எதிரிகள் ஆஜர்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 20th day of September 2024.

நான் சேவகன்குளத்தில் வசித்து வருகிறேன். ஜேசிபி கிளினராக உள்ளேன் . ஆஜர் எதிரிகளை தெரியும். என்னுடைய பக்கத்துவீட்டுக்காரர்கள். அ.சா.1 என்னுடைய அம்மா. 30.01.2008 ம் தேதி சுமார் 07.30 மணியளவில் நானும் எனது அண்ணன் மற்றும் அம்மா எங்கள் வீட்டில் சாப்பிட்டுக்கொண்டிருந்தோம். வெளியே சத்தம்கேட்டு எனது அம்மா வீட்டிற்கு வெளியே சென்று பார்த்தார். பின்னர் எனது அம்மாவின் சத்தம்கேட்டு நானும் எனது அண்ணணும் வெளியே சென்று பார்த்தோம். எனது அம்மாவின் இடது பக்க தலையில் இரத்தம் இருந்தது. ஆஜர் எதிரிகள் எனது அம்மாவை தரதரவென்று இழுத்து சென்றனர். பின் எங்களது சத்தத்தைகேட்டு ஆஜர் எதிரிகள் அங்கிருந்து சென்றுவிட்டனர். நானும் எனது அண்ணணும் எனது அம்மாவை நான்குநேரி அரசு மருத்துவமனைக்கு அழைத்துசென்றோம். ஆஜர் எதிரிகள் இடம் சம்பந்தமாக பிரச்சனை செய்தார்கள். போலிஸார் விசாரணை செய்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை இல்லை

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No.419/2018 |
| Deposition Of Witness for | Prosecution PW 1<br>Defense<br>Court |
| Name | திருமதி.தேவி |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2024 |

எதிரிகள் ஆஜர்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 20th day of September 2024.

நான் சேவகன்குளத்தில் வசித்து வருகிறேன். கூலி வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். என்னுடைய ஊர்க்காரர்கள். இடம் சம்பந்தமாக எனக்கும் ஆஜர் எதிரிக்கும் பிரச்சனை இருந்துவந்தது. கடந்த 30.01.2016 ம் தேதி மாலை சுமார் 07.00 மணியளவில் நான் எனது வீட்டிலிருந்தபோது ஆஜர் எதிரிகள் மற்றும் 4,5 நபர்கள் இருந்தார்கள். அவர்கள் காரில் வந்தார்கள் என்று நினைக்கிறேன். சத்தம்கேட்டு நான் வெளியே வந்து பார்த்தபோது ஆஜர் எதிரிகள் என்னை அருவாள் போன்ற ஆயுதத்தை வைத்து தலையில் அடித்து எனது சேலையை இழுத்தார்கள். உடனே நான் மயக்கம் போட்டு கீழே விழுந்துவிட்டேன். அப்போது எனது சத்தம்கேட்டு எனது மகன்கள் வந்தார்கள். எனது மகன்கள் என்னை நான்குநேரி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள்.

எதிரிகள் எப்போதும் என்னை ஊரில் இருக்கக்கூடாது என்றும், ஊரைவிட்டு ஓடவேண்டும் என்று என்னை திட்டுவார்கள். வழக்கு சம்பவம் குறித்து காவல்நிலையத்தில் புகார் அளித்தேன். காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அது **அ.சா.ஆ.1** ஆகும். போலிசார் என்னை

விசாரணை செய்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை இல்லை